January 09, 2009

# WINDCARE Chronicle

Praise the Lord

**Web**: www.windcareindia.com

*Reaching you with News drops!*

Volume 02, Issue 12

## நமது சிந்தனைக்கு

ஒரு ஓவியர் கை விரலை வரையச் சொன்னால், இருபது பேர்களுடைய கைகளை பார்த்துவிட்டுதான் வரைய உட்காருவார். நாம் சில நேரங்களில் தேவையற்ற பணிகளுக்காக அதிகமான நாட்களைச் செலவழித்து விடுகிறோம்.

மதிய உணவு இடைவேளையில் அலுவலக சக ஊழியர்களுடனே உணவை திறந்த அவர் ஒ இன்றைக்கும் தயிர் சாதம்தானா? என்று தினமும் சொல்வார், உடனிருப்பவர் தாங்க முடியாமல் தினமும் அலுத்துக் கொள்ளும் நீ உன் மனைவியிடம் வேறு ஏதாவது செய்யச் சொல்ல வேண்டியது தானே என்று கூறினார். ஆவர் சிரித்துக்கொண்டே.. ஏனக்குத் தான் இன்னும் திருமணம் ஆகவில்லையே.. நான் தான் தினமும் சமைத்து வருகிறேன் என்று பதில் கூறினார். தன்னுடைய செயல்களுக்கு அடுத்தவரை சாட்சியாக்குவதும் நம் நேரத்தை விரயமாக்கவே உதவும்.

கணவன் இறந்தால் உயிரோடுள்ள மனைவியையும் எரித்துவிடும் உடன்கட்டை என்ற கொடிய கலாச்சாரம் இருந்த சமயம் ராஜாராம் மோகன்ராயும், கிறிஸ்தவ மிஷனெரி வில்லியம் கேரியும் மிக தீவிரமாக அதை எதிர்த்து வந்தார்கள். கேரி ஆங்கில அரசின் ஆணைகளை இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கும் பொறுப்பேற்றிருந்தார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை ஆலய வழிபாடு நடத்த சென்று கொன்டிருந்த கேரி–யிடம் உடன்கட்டை ஏறுதல் என்ற பழக்கத்தை தடை செய்யும் ஆங்கில அரசு ஆணை கொடுக்கப்பட்டது. உடனே அவர் தனது அலுவலகம் நோக்கி விரைந்தார்.

வழிபாடு தடைபடுமே என்ற தனது விசுவாசியிடம் கேரி கூறினார். நான் தாமதிக்கிற ஒவ்வொரு வினாடியும் பல பெண்களின் உயிர்கள் பறிக்கப்படும் ஏனவே நான் விரைவாகச் செய்யவேண்டிய காரியம் எது என்பதை இறைவன் அறிவார் என்றவாறு சரித்திரத்தில் நீங்கா இடம் பெற்றுவிட்ட அந்த ஆணையை இந்திய மொழிகளில் மொழிபெயர்க்க விரைந்தார்.

பைபிள் கூறுகிறது **..நீ எறும்பினிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தை கற்றுக்கொள்.. நீதிமொழிகள் 6. 6.** அதற்கு அதிகாரியுமில்லை, எஜமானுமில்லை, கண்காணியுமில்லை ஆனால் அதன் திட்டமிடுதலிலும், உழைப்பிலும் குறைவே இல்லை.

**Courtesy: World Light Service Mission**

## Our Services

Without Crane Technology

Wind park Operation

Maintenance & Services

Service Centre

Turnkey Project

Small Wind Turbine

Consultancy

## Our Vision

To ensure our customers receive a satisfactory services from a number one service provider.

Enhance the contribution of our services to the global market and provide continuous support to the global efforts in attaining energy Independence.

## அன்புக்குரியவர்களே...

புதிய வருடத்தின் மகிழ்வோடு உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நாம் அனைவரும் புதிய வருடத்தில் புதிய திட்டங்கள், முயற்சிகள், வழிமுறைகளை தீர்மானிப்பது இயல்பு ஆனால் கடைபிடித்து வெற்றிபெறுதலே சிறப்பான காரியமாகும்.

நமது நிறுவனம் கடந்த 2008–ம் ஆண்டில் பயணித்து வந்த பாதையில் சந்தித்த தடைகள், தோல்விகள், வெற்றிகள் ஆகியவற்றை சீர்தூக்கிப் பார்த்து ஒரு சிறப்பான வெற்றியின் இலக்கை அடைய தீர்மாணித்துள்ளோம்.

அதாவது இன்று காற்றாலைப் பணி உலகில் தன்னிகறற்ற Engineering Solution மற்றும் Service Provider என்ற நிலையை அடைவது.

குறிப்பாக **0% Accident** என்ற நிலையை நமது தலையாய குறிக்கோளாக கொண்டு நமது பணித்தளங்களிலும், வாகனம் பயன்படுத்தும் பொழுதும் பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் உபகரணங்களை முழுமையாக கையாள அன்புடன் அழைக்கிறேன்.

மேலும் பணித்தளத்தில் எரிபொருள் சிக்கனம், தேவையில்லாத செலவினங்களை தவிர்த்தல், சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றைக் கைக்கொன்டு இன்றைய பொருளாதார நெருக்கமான சூழ்நிலையில் சிறப்பாக பணியாற்ற அன்புடன் அழைக்கிறேன்.

**S. Antonyraj - Chief Executive**

## 2008 நன்றி ஜெபக் கூடுகை

டிசம்பர் 19, நமது நிறுவனத்தின் 2008–ம் ஆண்டின் வெற்றிகள், பணியாயளர்கள்



குடும்ப ஆசீர்வாதம் மற்றும் பாதுகாப்பு நமக்கு பணியளித்த நிறுவனங்கள், நம்முடன் இணைந்துள்ள நிறுவனம் மற்றும் எல்லா துறைகள் மற்றும் அனைத்து சிறந்த நிகழ்வகளிலும் இறைவன் நமக்கு அளித்த எல்லாவித நன்மைகளுக்காகவும் நன்றி சொல்லும் வண்ணமாக நிறுவனத்தின் பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினரும் கலந்து கொண்ட சிறப்புப் பிராத்தனை நடைபெற்றது. சுமார் 40–க்கும் மேற்பட்டோர் பிரார்த்தனையில் கலந்து கொன்டனர். தேவனுடைய வீடு ஜெபத்தளத்தில் Rev. D. ஜெயராஜ் இந்த பிரார்த்தனையை வழிநடத்தினார்.

**வெற்றி என்பது எவரையோ வீழ்த்திவிட்டுச் செல்கிற சாகசம் அல்ல, அது நமது ஆழ்மனம் ஆசைப்பட்ட ஒரு செயலின் மீது பயணப்பட்டு அதை நிறைவடையச் செய்யும் அற்புதமான பணியாகும்.** – (அலைகள்)

Edited By: P. Jebastin
+91-94422 68143

## Project Works in Vestas

மஹாராஸ்டிரா மாநிலம் நந்தூர்பார் பணித்தளத்தில் கடந்த டிசம்பர் 26–ல் வெற்றிகரமாக ஒரு புதிய **VESTAS 1650 கிவோ** காற்றாலையை நிறுவும் பணியை நமது நிறுவனம் வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. இது மீண்டும் ஒரு துவக்கமாக நமக்கு அமைந்துள்ளது.

## தொடரும் மைல்கல்கள்...

SUZLON 1.25-MW ROTOR unit De and Re erection வேலை K-505 Location நந்தூர்பார் சைட்டில் (மஹாராஸ்டிரா) கடந்த 9 மற்றும் 11 தேதிகளில் வெற்றிகரமாக நமது அணியினர் செயல்படுத்தியுள்ளனர். இது நமது இரண்டாவது வெற்றி, அணியினரின் தன்னம்பிக்கை, உறுதி மற்றும் கடின உழைப்பை பாராட்டுகிறது. தொடர்ந்து 2.1 MW மற்றும் 1.5 MW –வேலைகளுக்குரிய அனைத்து ஆயத்தப் பணிகளும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## Family get together

டிசம்பர் 22, 2008

கிறிஸ்துமஸ் பண்டிகை மற்றும் குடும்ப ஐக்கிய கூட்டம் உடுமலை சன் ஹோட்டலில் நடைபெற்றது. பணியாளர் மற்றும் குடும்பத்தினருடன் நட்பை பகிர்ந்து கொள்ளவும் சிறப்பான ஒரு தருணமாக அமைந்திருந்தது. R. C. Father ஜெபம் மற்றும் ஆலோசனை–களை வழங்கினார். பணியாளர்கள் நிறுவனத் தலைவர் மற்றும் குடும்பத்தினர்கள் தங்கள் கருத்துக்கள் மற்றும் 2008–ன் அனுபவங்களை மகிழ்வுடன் பகிர்ந்து கொன்டனர். ஆண்டிறுதி நன்றி பிரார்த்தனை மற்றும் ஐக்கிய விருந்துடன் கூடுகை சிறப்பாக முடிவடைந்தது.





## விளையாட்டுப் போட்டி

அந்தியூர் டிசம்பர் 12 – 13, நமது வெஸ்டாஸ் ஆபரேஷன் பணித்தளத்திலுள்ள பணியாளர்கள் மத்தியில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. ASIAN, MAGNA, SABARE, MYVADI ஆகிய Team–களுக்குள்ளே நடைபெற்ற இப்போட்டியில் **MAGNA** அணியினர் வெற்றிபெற்றனர்.

100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் ஓட்டப்பந்தங்களும் நடத்தப்பட்டன. வெற்றி பெற்ற நபர்கள் மற்றும் அணியினருக்கு Site Annual Meeting –ன் போது பரிசுகள் வழங்கப்பட உள்ளது. அனைவரும் காற்றாலை பணித்தளத்தில் நடைபெற்ற இப்போட்டி தங்களுக்கு உற்சாகம் அளிப்பதாக தெரிவித்தனர். கலந்து கொன்ட யாவரையும், பணித்தள தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களையும் பாராட்டுகிறோம்.



## SAFETY TRAINING

டிசம்பர் 17, பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி MARUTHUR OPERATION SITE–ல் அனைத்து பணியாளர்களுக்கும் LCD திரை வாயிலாக திரு. சாஜி வழங்கினார். நமது நிறுவனத்தின் HR Manager / CEO / MIS Dept. –களிலிருந்தும் மற்றும் Operation Head திரு. தேவ பாலன் ஆகியோரும் கலந்து கொண்டு உற்சாகப்படுத்தினர். பாதுகாப்பின் அவசியம் மற்றும் பாதிப்புகள் குறித்து விவரிக்கப்பட்டது. இறுதியில் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

## TRAINEES AWARD

டிசம்பர் 22, செந்தமிழ் ஐடிஐ வாயிலாக நான்கு மாதம் பயிற்சிக்காக வந்து கர்நாடகா Special works மற்றும் நமது Wind Park operation site–லும் சிறப்பாக பணியாற்றிய 16 நபர்களுக்கு சான்றிதழ்கள், பரிசுகள் மற்றும் கேக் மற்றும் சிறப்பு விருந்து உள்ளடங்கிய ஒரு நாள் கலந்துரையாடல் உடுமலை சன் ஹோட்டலில் நடைபெற்றது. மாணவர்கள் தங்கள் கற்றுக்கொண்ட புதிய தகவல்களை உற்சாகத்துடன் பகிர்ந்து கொன்டனர் அவர்ளின் நலனில் அக்கரை கொண்டு நல்ல ஆலோசனை–களையும் நம்பிக்கையூட்டும் கருத்தக்களையும் நிறுவனத்தின் தலைவர் மற்றும் துறைத் தலைவர்களும் பகிர்ந்து கொண்டனர்.




## வாழ்த்துக்கள்

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவிக்கும் வண்ணமாக நமது நிறுவனத்தின் சார்பில் அனை–வருக்கும் கேக் வழங்கப்பட்டது. 2009–ம் ஆண்டிற்கான காலண்டர்கள் மிகவும் சிறப்பாக நமது செயல்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் அச்சிடப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. நிறுவனம் தனது புத்தாண்டு வாழ்த்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறது.

## Electrical Safety alert to all...

டிசம்பர் 05, அந்தியூர் 750 சைட்டில் பணியாற்றிய திரு. பார்த்தசாரதி கவனக்குறைவால் செயல்பட்டதால் மின்சாரத்தில் பாதிக்கப்பட்டு உடுமலை அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டு நிறுவனத்தினரால் கோவை பெத்தேல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுள்ளார். பணித்தளத்தில் எந்த சூழ்நிலையிலும் கவனமாக மற்றும் பாதுகாப்புடன் செயல்பட அறிவுறுத்துகிறோம். அசட்டைத்தனமாக செயல்படுதல் ஆபத்தில் முடிவடையும்.